# <u>அவதாரங்களும் ஆழ்வார்களும்</u>



ஜெய் ஸ்ரீமன் நாராயணா

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

எம்பெருமானின் தசாவதாரங்களுடன், திவ்யசூரிகள் என்றும் அறியப்படும் ஆழ்வார்களுக்கும் இருக்கும் அவதார ஒற்றுமைகளை அறிந்து வருகிறோம்.

நரசிம்ம அவதாரத்திற்க்கும் உள்ள ஒற்றுமையை இங்கு அறியலாம். (அந்திப் பொழுதில், சிங்க உருவம் எடுத்து, இரணியன் எனும் பகைவனை அழித்தவனாகிய ஸ்ரீமந் நாராயணனுக்கு, அவதாரக் களைப்பு தீர, அவனுக்கு திருப்பல்லாண்டு பாடுவோம்!)



**<u>கருட பகவான்</u>**

இறைவனிடம் அடியவர்களும் மக்களும் தங்கள் வேண்டுதலைச் செய்வது வழக்கம். ஆனால் இங்கோ பெரியாழ்வார் நரசிம்ம அவதாரம் செய்த களைப்பு தீரப் பல்லாண்டு பாடுவோம் என அழைப்பது தாய்மை கலந்த பக்தியின் எல்லை. பரந்தாமனின் நரசிம்ம அவதாரத்தைத் சேவிக்க விரும்புவதாக கருடன் கேட்க, பகவான் அஹோபிலத்தில் ஒன்பது நரசிம்ம வடிவங்களில் கருடாழ்வாருக்கு காட்சி அளித்தார். கருட பகவான், அந்த நவந்ருசிம்ம வடிவங்களை பூஜித்து வழிபட்டார். கருடன்,

‘அஹோபிலம், மஹாபலம்’ என்று போற்றிப் பணிந்தார். உயர்ந்த மலையில் ஒரு குகையில் இவ்வாறு காட்சி தந்ததாலேயே (பிலம் என்றால் குகை) பெருமைமிக்க, பலம் வாய்ந்த அஹோபிலம் என்ற கருடனின் கூற்றாலேயே இத்தலம் இப்பெயர் பெற்றது.



**பெரியாழ்வார்**

4.நரசிங்கவதாரமும் பெரியாழ்வாரும்

எம்பெருமான் நரசிங்கமாக அவதரித்தது ஸ்வாதி நட்சத்திரத்தில். ஸ்ரீகருடாழ்வார் அம்சமாக பெரியாழ்வாருடைய அவதாரமும் அதே ஸ்வாதி

நட்சத்திரத்தில்.

பெரியாழ்வார் பாசுரங்களில் பல்லாண்டு பாடும் முதற் பதிகத்திலேயே ந்ருசிம்ஹனை, நாளை என்பது நரஸிம்மனுக்கு இல்லை என்கிற அவதாரத்தை பேசி திருபல்லாண்டு பாடுகிறார். கோளரி மாதவன் எம்பெருமான் நரசிங்கன் தன் பெருமையறியாமல் பகைத்த இரணியனது மார்பை கிழித்தறுத்து தன்னைப் பரத்துவமென்று காட்டினார்.

பட்டர்பிரான் பெரியாழ்வார் சாஸ்த்திரங்களைக் கொண்டு எம்பெருமானையே பரத்துவமென்று காட்டி கிழியறுத்தார்.

ஶ்ரீஹரியான எம்பெருமான் கோளரி ந்ருஸிம்ஹனாய் அவதரித்த போது அப்பிரதோஷகால சம்பவத்தை மூவுலகவாசிகளும் அனுபவித்து ஆனந்தித்தனராம்.

பெரியாழ்வார் கூடலுரில் கிழியறுத்து "பட்டர்பிரானாய்" யானையின் மீது வலம்வந்த காட்சியை அனுபவிக்க முப்பது முக்கோடி தேவர்கள் மட்டுமல்லாமல் எம்பெருமான் பிராட்டியுடன் ஶ்ரீ கருடசேவையில் காண விழைந்தாராம்.

இவ்வாறு அவதரித்த நாளும், செய்த செயலிலும், அனுபவங்களில் ஒற்றுமை உள்ளது. அவற்றை போற்றிப் பாடுவோம்.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

(Ref. from ஶ்ரீ வங்கீபுரம் ஸ்வாமி நவநீதம் ஶ்ரீராமதேசிகாசார் அவர்களின் அபிநவ தசாவதாரம் கட்டுரை)

(தொடரும்...)

அடியேன் தாஸன்

சித்ரா அமுதன்

(Vadodara)

